**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.459/2025**

**PW - 6 (கூடுதல் சாட்சி)**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. வேத பிறவி |
| Father's / Husband Name | : | த/பெ.பெரியதம்பி |
| Village | : | சேலம் |
| Taluk | : | சேலம் |
| Calling | : | காவல் ஆய்வாளர், வேலக்கவுண்டம்பட்டி |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.06.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த திரு.கைலேஷ்வரன் காவல் உதவி ஆய்வாளர் இறந்துவிட்டார். திருமதி. இந்திராணி காவல் ஆய்வாளர், பொறுப்பு வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையம் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி தேவி ஆகியோர்களின் கையெழுத்தும், கையொப்பமும் நன்கு பரிட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 22.04.2025ம் தேதி 13.45 மணிக்கு திரு.கைலேஷ்வரன் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் பணியில் இருந்த போது காளியம்மாள் க.பெ. கருப்பண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று வேலகவுண்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.54/2025 சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ஆக வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் அசல் புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) மேலும், இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 12.45 மணிக்கு சம்பவயிடமான நாமக்கல் – திருச்செங்கோடு ரோடு, மணிக்கட்டிபுதூர்,

HP பெட்ரோல் பங்கே அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு, சம்பவயிட சாட்சிகளான ராஜு மற்றும் ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ராஜு மற்றும் ராஜா ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) மேலும், பின்னர் அன்றைய தினமே நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் சவக்கிடங்கின் முன்பு வழக்கு விபத்தில் இறந்துபோன கருப்பண்ணன் த.பெ. செல்லப்பாகவுண்டர் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் மதியம் 03.15 மணி முதல் 04.45 மணி வரை விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகி**றது.

4) மேலும், அன்றையதினமே சாட்சிகள் 1. காளியம்மாள், 2.துரைசாமி, 3.ராஜா, 4.பழனியப்பன், 5.மணி,6. ஆனந்த், 7.காளியண்ணன் 8.கருப்பண்ணன் ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோனவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்க கோரி நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவ அலுவலர் செங்கோட்டுவேல் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதத்தை முதல்நிலை காவலர் 1696 முத்தம்மாள் அவர்கள் மூலம் கொடுத்தனுப்பி பிரேத பரிசோதனை சான்று பெறப்பட்டது. **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும், தனது முதல் விசாரணையை முடித்து வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திருமதி.இந்திராணி அவர்கள் வசம் ஒப்புவித்துள்ளார்.

5) பின்னர், காவல் ஆய்வாளர் திருமதி. இந்திராணி அவர்கள் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் எதிரியை தொடர்ந்து தேடி வந்த நிலையில் 28.04.2025-ம் தேதி 03.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி ரங்கராஜன் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் காவல் பிணையில் 03.30 மணிக்கு விடுவித்துள்ளார். பின்னர் 29.04.2025 ம் தேதி வழக்கு விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 88 Q 5190 என்ற பதிவெண் கொண்ட Benzegls 450 காரை நாமக்கல் வடக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில் அவர்களுக்கு அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை

பெற்றுள்ளார். **மேற்படி TN 28 Q 5190 என்ற பதிவெண் கொண்ட Benzegls 450 காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படு**கிறது. பின்னர் 21.08.2025 ம் தேதி வழக்கில் விபத்திற்குள்ளான வாகனமான TN 07 BC 1252 என்ற பதிவெண் கொண்ட TVS XL SUPER Heavey Duty இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில் அவர்களுக்கு அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். **மேற்படி TN 07 BC 1252 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super Heavy Duty இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படு**கிறது. மேலும், வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.தேவி அவர்கள் பொறுப்பேற்றவுடன் வழக்கு கோப்பை அவர்கள் வசம் ஒப்படைத்தார்.

6) பின்னர், காவல் ஆய்வாளர் திருமதி.தேவி அவர்கள் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.08.2025-ம் தேதி இவ்வழக்கின் விபத்தில் இறந்து போன கருப்பண்ணன் த.பெ. செல்லப்பகவுண்டர் அவர்களுக்கு சான்று வழங்கிய சட்டம் சார்ந்த மருத்துவர் திரு.செங்கோட்டுவேல் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில், பிரேத பரிசோதனையின் போது உடனிருந்த திரு.முத்தம்மாள் முதல்நிலை காவலர் 1496, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.ஆ.கைலேஷ்வரன், காவல் ஆய்வாளர் (பொறுப்பு) திருமதி.இந்திராணி ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து 10.08.2025 ம் தேதி வழக்கின் எதிரி மீது 281, 106(1) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

7) சம்பவம் மதியம் 1.15 மணியளவில் நடைபெற்றது. காவல் நிலையத்திற்கு 1.45 மணியளவில் தகவல் கிடைத்தது. சம்பவயிடத்திற்கும், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கும் இடையே சுமார் 10 கி.மீ தொலைவு இருக்கும். அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கும், எங்கள் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 14 கி.மீ தொலைவு இருக்கும். சம்பவயிடத்தில் இருந்து அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து எங்கள் காவல் நிலையத்திற்கு வர சுமார் ஒரு மணி நேரம் ஆகும் என்றால் சரி. விபத்து பதிவேட்டில் அடிப்பட்ட நபர் சிகிச்சையில் அனுமதிக்கப்பட்ட நேரம் 12.45 என்று கண்டுள்ளது. கண்ணுற்ற சாட்சிகளான கருப்பண்ணன், மணி ஆகியோரின் போலிஸ் வாக்குமூலத்தில் HP பெட்ரோல் பங்க் அருகில் உள்ள டீக்கடையில் தேநீர் அருந்தி கொண்டிருந்ததாக கண்டுள்ளது. மாதிரி வரைபடத்தில் HP பெட்ரோல் பங்க் அருகில் உள்ள டீக்கடை காண்பிக்கப்படவில்லை .சம்பவ சாலை நான்கு வழி

சாலை. மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடைபெற்ற பகுதி என்று இரு வழி சாலையில் வாகனங்கள் செல்லக்கூடிய பகுதியில் தான் சம்பவம் நடைபெற்ற பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், எதிரிக்கு எதிராக தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**